

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், இரண்டாம் கட்ட மனுநீதி முகாமில் 34 யனாளிகளுக்கு தமிழக அரசின் நலத்திட்ட உதவிகளை அகஸ்தீஸ்வரம் வட்டம், தேரேகால்புதூர் வருவாய் கிராமத்திற்குட்பட்ட கோதை கிராமம், அரசு தொடக்கப்பளியில் இன்று (14.12.2016) வழங்கினார். நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் திரு. ஆர். ராஜ்குமார் உடனுள்ளார்.

செ.வெ.எண்: 867/2016 நாள்: 14.12.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில்,**
**இன்று (14.12.2016) நடைபெற்ற இரண்டாம் கட்ட மனுநீதி நாள் முகாமில் 34 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**

கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், தேரேகால்புதூர் வருவாய் கிராமத்திற்குட்பட்ட கோதை கிராமம், அரசு தொடக்கப்பள்ளியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் இரண்டாம் கட்ட மனுநீதி நாள் முகாம் நிறைவுநாள் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (14.12.2016) நடைபெற்றது.

16.11.2016 அன்று நடைபெற்ற முதற்கட்ட முகாமில் 45 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டன. இதில் 12 தகுதியான மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த மனுக்கள் மீதான பதில்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் முன்னிலையில், சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களால் பொது மக்களுக்கு பதில்கள் தெரிவிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து, வருவாய்த்துறை சமூகபாதுகாப்பு திட்டத்தின்கீழ், இந்திராகாந்தி தேசிய முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை என மொத்தம் 15 நபர்களுக்கு மாதந்தோறும் தலா ரூ. 1,000/- பெறுவதற்கான ஆணைகளையும், 18 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டைகளையும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பாக ஒரு பயனாளிக்கு இலவச தேய்ப்புபெட்டியும் என மொத்தம் 34 பயனாளிகளுக்கு தமிழக அரசின் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் இன்று நடைபெற்ற இரண்டாம் கட்ட மனுநீதி நாள் முகாமில் வழங்கினார்.

முன்னதாக வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை,, வேளாண் பொறியியல் துறை, வேளாண் விற்பனைத்துறை ஆகிய துறைகளின் மூலம் தமிழக அரசு செயல்படுத்தி வரும் திட்டங்கள் குறித்து விளக்கவுரையாற்றினார்கள்.

மேலும் சுகாதாரத்துறை, தோட்டக்கலை துறை மற்றும் வேளாண்மை துறை மூலம் வைக்கப்பட்டிருந்த கண்காட்சியினை பார்வையிட்டார்.

நிகழ்ச்சியில் நாகர்கோவில் கோட்டாட்சியர் திரு. ஆர். ராஜ்குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு. நிஜாமுதீன், இணை இயக்குநர் (வேளாண்மைதுறை) திரு. இளங்கோ, சமூக பாதுகாப்புத்திட்டம் தனி துணை ஆட்சியர் திரு.சந்திரன், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திரு. சிவதாஸ், துணை இயக்குநர் (தோட்டக்கலைத்துறை) திரு. அசோக் மேக்ரின், அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் திரு. அருளரசு, உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.